# THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION

## FORM -3

## MINUTES OF THE COUNCIL MEETINGS

## (See rule 5 and Serial Number 3 of Appendix 1)

## சாதரணக் கூட்டப்பொருள்

2010ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை–I பிரிவு எண் 3 (1)–ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 30.07.10 | 1 | இம்மாநகராட்சி பகுதிகளில் கொசு மற்றும் ஈக்களின் தொல்லை மழை காலம் வர இருப்பதால் மிகவும் அதிகமாக உள்ளது. இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. எனவே கொசு புழுக்களை ஒழிக்க Fenthion 82.5% EC பூச்சி கொல்லி மருந்து 100 லிட்டர் தேவையாக உள்ளது. நே.மு.க. எண். 60560/06/ஜெ2 நாள் 12–09–2009 என்ற கடிதத்தின்படி நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்களும் இதனை வாங்க பரிந்துரை செய்துள்ளார்கள். அவசர அவசியம் கருதி இந்த வேதி மருந்துகளை வாங்குவதற்காக ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1.75 லட்சமாகும். (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தி ஐயாயிரம் மட்டும்) தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு –** 1 அனுமதிக்கலாம்<br>2. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>எச்1/ 10463/2009 | 150) அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 2 | தூத்துக்குடி மாநகராட்சியில் தட்டச்சர் நிலை (1) பணியிடத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31–05–2010ல் பணியிலிருந்து ஓய்வு பெற்ற திருமதி பொ. கமலம் என்பவருக்கு அவர் பணிபுரிந்த காலத்தில் அன்னாரது ஊதியத்தில் மாதந்தோறும் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகை, அதற்குரிய வட்டி மற்றும் மான்யத்தொகை கீழ்க்கண்ட விபரப்படி அன்னாருக்கு வழங்கப்பட வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநல நிதி சந்தாத் தொகை பிடித்தம்<br>01–03–1986 முதல் 30–06–1998 முடிய<br>மாதம் ரூ 20/– வீதம் 148 மாதங்கள் ரூ. 2960/–<br>2) அதற்கான வட்டித் தொகை<br>01–03–1986 முதல் 31–05–2010 வரை ரூ. 11291/–<br>3) சிறப்பு சேமநல நிதி மான்யத் தொகை<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3)<br>துறை அரசாணை (பத்தாண்டு) எண். 340 ரூ.10000/–<br>நாள் 08–08–2008ன் படி<br>––––––––––<br>ரூ. 24251/–<br>––––––––––<br><br>மேற்கண்ட தொகை ரூ. 24251/–ஐ (ரூபாய் இருபத்தி நான்காயிரத்து இருநூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். சி2/8446/2010 | 151) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 3 | இம்மாநகராட்சி மீது திரு. சாந்தகுமார், என்பவர் தனக்கு வேலை வழங்க கோரி சென்னை, உயர்நீதி மன்ற மதுரை கிளையில், தொடர்ந்த வழக்கு எண். W.P. 1084/2010 க்கு மாநகராட்சி சார்பாக வழக்காட மாமன்ற வழக்கறிஞர் திரு. எஸ். கடற்கரை அவர்களை நியமனம் செய்ததற்கும் அது வகைக்குரிய செலவு தொகையை பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். இ2/20382/2009 | 152) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 4 | தூத்துக்குடி மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு கதவு எண். 135, நகரளவு வார்டு – 4 பிளாக் 25 நகரளவு எண். 3481/1 3,4,5,6 3482, 3484, 3485 பகுதி 3486/2 பகுதி 3490 பகுதி மொத்த பரப்பளவு 10441.77 ச.மீ. இடத்தில் நிலையிலுள்ள மருத்துவமனை வளாகத்தில் கூடுலாக தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் மருத்துவமனை கட்டிடம், தரைத்தளம் மற்றும் முதல்தள கட்டிடத்தில் வணிகவளாக கட்டிடமும் மூன்றாம் தளத்தில் செவிலியர் பயிற்சி பள்ளி கட்டிடமும், நான்காம் தளத்தில் செவிலியர் பள்ளிக்கான தங்கும் விடுதி கட்டிடமும் கட்ட முழுமைத்திட்டத்தில் இடம் வணிக உபயோகம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை பகுதியாக உள்ளதை பொது உபயோக பகுதியாக மாற்றம் செய்யவும் மற்றும் பலமாடி கட்டிடம் கட்ட அனுமதி கோரி அரசு செயலாளர் வீட்டுவசதி துறை சென்னை அவர்களுக்கு முகவரியிட்டு மனுதாரர்களான திரு.எம்.வி. முத்துராஜன் திரு. எம்.வி. சுப்பிரமணியன் ஆகியோர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். | 153) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
பாளையங்கோட்டை ரோடு ஏ.வி.எம். மருத்துவமனை வளாகம் மேற்கு பகுதியில் கதவு எண். 135 நகரளவு வார்டு எண். 4 பிளாக் 22 நகரளவு எண். 3481/1 2, 3, 4, 5, 6, 3482, 3490 பகுதியில் 184’ X 130’ அளவில் மாநகராட்சி அனுமதி பெறாமல் தரைத்தளம் முதல் தளம் இரண்டாவது தளம் மூன்றாவது தளம் மற்றும் நான்காவது தளம் அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.<br><br>
அனுமதியில்லா கட்டிடத்திற்கு தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 296 (1) (2)ன் படி<br><br>
UAC NO. 3/2009 எப்3 நாள் 20–01–2009<br><br>
UAC NO. 22/2009 எப்3 நாள் 17–03–2009<br><br>
UAC NO. 42/2009 எப்3 நாள் 18–05–2009<br><br>
UAC NO. 45/2009 எப்3 நாள் 16–07–2009<br><br>
UAC NO. 101/2009 எப்3 நாள் 13–10–2009<br><br>
UAC NO. 103/2009 எப்3 நாள் 29–10–2009 ன் படி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாநகராட்சி சட்டம் பிரிவு எண். 296 (3) ன்படி உறுதி செய்யப்பட்ட அறிவிப்பு வழங்கப்பட்டு தூத்துக்குடி குற்றவியியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றச் சாட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>
மனுதாரர்கள் நில உபயோகம் மாற்றம் கோரியுள்ள இடம் நகரளவு வார்டு – 4 பிளாக் –25 நகரளவு எண். 3481/1, 2,4,5,6 3482, 3484, 3485 பகுதி 3486/2 பகுதி 3490 ஆகியவை ஒப்புதலளிக்கப்பட்ட பிரிவு அபிவிருத்தி திட்டம் B Part I ல் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை பகுதியாக உள்ளது.<br><br>
முழுமைத்திட்டத்தில் வார்டு எண். 2 பிளாக் எண். 22 நகரளவு எண். 3481, 3482 வணிக பகுதியாகவும் நகரளவு எண். 3480, 3481, 3482 , 3490 pt கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை உபயோக பகுதியாக உள்ளது.<br><br>
மேற்கண்டுள்ள ஒப்புதலளிக்கப்பட்ட பிரிவு அபிவிருத்திட்டம் B Part I ல் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை பகுதி மற்றும் முழுமைத்திட்டத்தில் வணிகபகுதி மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலை உபயோக பகுதிகளை பொது உபயோக பகுதியாக நிலமாற்றம் செய்யவும் பலமாடி கட்டிட பகுதியாக அறிவிப்பு செய்யவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்ட குழுமம் தூத்துக்குடி மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் வழியாக அரசு செயலாளர் வீட்டு வசதித் துறை சென்னை, அவர்களுக்கு மனுதாரர்களின் நில உபயோக மாற்ற உத்தேசத்தினை மேலனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். எப்3/ 7546/2010
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>5</td>
<td>
தூத்துக்குடி மாநகராட்சி கீழரதவீதி வணிக வளாக கடை எண்.7க்கு ஒப்படைக்கும் நாளிலிருந்து 3 ஆண்டு உரிமத்திற்கு 24–6–2010ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளிகள் 2 மட்டும் பெறப்பட்டுள்ளது. மேற்படி இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ. எண்</td><td>ஏல முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் பெயர் மற்றும் முகவரி</td><td>வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை</td></tr>
<tr><td>1</td><td>திரு. டி. செந்தில் கணேஷ்<br>த/பெ. கே. திருமலைராஜ், 111/66/38இ சந்திவிநாயகர்புரம் போல்பேட்டை, தூத்துக்குடி.</td><td>ரூ. 810/– (மாத வாடகை)</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். ஹமீது த/பெ. முகமது அப்துல்லா<br>110. போல்பேட்டை, தூத்துக்குடி</td><td>ரூ. 790/– (மாத வாடகை)</td></tr>
</table>
</td>
<td>154) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு–** கீழரதவீதி வணிகவளாக கடை எண் 7க்கு மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. டி. செந்தில்கணேஷ் த/பெ. கே. திருமலைராஜ் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 810/– கொடுத்துள்ளார். எனவே மேற்படி திரு. செந்தில்கணேஷ் த/பெ. கே. திருமலைராஜ் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை மாத வாடகை ரூ 810/– உரிமம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். அ16/816/2009 | |
| | 6 | தூத்துக்குடி மாநகராட்சி ஆண்டாள் தெரு கருத்தப்பாலம் அருகில் பக்கிள் ஓடையில் ஆக்கிரமிப்பு செய்த திரு. இராஜமனோகரன் (1) திரு. வேல்சங்கர் (2) திரு. ஜெய்சங்கர் (3) ஆகியோர்கள் தூத்துக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கட்டிடங்களை அகற்றக்கூடாது என தொடரப்பட்ட வழக்கு ஓ.எஸ். எண். 288/10 in I..A.No. 269/10ல் இம்மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். செல்வராஜ் அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்1. 11576/2010 | 155) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7 | இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 51 வார்டுகளில் 20 வார்டுகள் 5 வார்டுகள் வீதம் நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு நகர் மன்ற தீர்மானம் எண். 186 நாள் 21–3–2007ன் படி மூன்று வருடங்களுக்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு ஒப்பந்ததாரர்கள் நியமனம் செய்யவும் ஒவ்வொரு வருடமும் அவர்களின் பணிதிறன் அடிப்படையில் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தத்தை புதுப்பித்துக்கொள்ளவும் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மன்றத் தீர்மானம் எண். 163 நாள் 31–8–09ல் ஒப்பந்தத்தை 16–7–2009 முதல் 15–7–2010 வரை நீட்டித்து அனுமதி வழங்கியுள்ளது. தற்போது 15–7–2010 அன்று ஒப்பந்த காலம் முடிவடைவதாலும் இ. டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரவேண்டியதிருப்பதாலும் போதிய கால அளவு இல்லையென்பதாலும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தத்தை 31–8–2010 வரை நீட்டித்துக்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** அனுமதிக்கலாம். எச்1. 254/2007 | 156) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 8 | தூத்துக்குடி மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்திலிருந்து திருச்செந்தூர் புறப்படும் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்வதற்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து திரு.மு. சத்யா இலட்சுமணன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.NO. 12444/10ல் M.P.1/10 ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உயர்நீதிமன்றத்தில் Status Qua order பெறப்பட்டுள்ளது.<br><br>மேற்கண்ட வழக்கில் அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களை முதல் பிரதிவாதியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி அவர்களை இரண்டாம் பிரதிவாதியாகவும் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் அவர்களை 3வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட வழக்கில் மாமன்ற வழக்கறிஞர் திரு எஸ். கடற்கரை அவர்களை மாநகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்தவும் அதற்காகும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 10905/10/எப்1 | 157) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 9 | இம்மாநகராட்சி போல்பேட்டை கதவு எண் 111/66/50 எ/1 கட்டிடம் வரிவிதிப்பு செய்துள்ளது சம்பந்தமாக கடிதம் எண் அ2/2672/03 06–12–2003ன் படி வரிவிதிப்பை ரத்து செய்ததை எதிர்த்து திரு. M.B. முருகேசன் என்பவர் சென்னை, உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு எண். 994/04ன் படி ஆணையர் உத்தரவு பிறப்பித்ததை எதிர்த்து இடைக்கால தடை வாங்கியுள்ளார். மேற்கண்ட தடையை நீக்கம் செய்யவும், வழக்கினை எதிர்த்து வழக்காடவும், அதற்கான செலவினை மாமன்றம் ஏற்றுக் கொள்ளவும், மாநகராட்சி சார்பாக எதிர்த்து வழக்காட வழக்கறிஞர் திரு. கடற்கரை B.Sc. B.L. அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ 5000/– வழங்கவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். அ2/1499/04 | 158) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 10 | தூத்துக்குடி மாநகராட்சி ஓய்வூதியர் திருமதி இ. குட்டியம்மாள் என்பவர் தனக்கு திருத்திய ஓய்வூதிய நிலுவைத்தொகை வழங்க மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். WPC (MS) No. 3032/2010ல் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாகவும் நியமித்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கை மாநகராட்சி சார்பாக வாதாட திரு. கடற்கரை வழக்கறிஞர் (மதுரை) அவர்களை நியமனம் செய்து வழக்கு வாதாட ஆகும் செலவுகளுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம் சி3/7654/2008 | 159) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11 | தூத்துக்குடி மாநகராட்சியின் ஓய்வூதியர் திருமதி லூர்தம்மாள் க/பெ. சிலுவை மிக்கேல் என்பவர் தனக்கு திருத்திய ஓய்வூதிய நிலுவைத்தொகை(1–6–88 முதல் 30–9–2004 காலங்களுக்குரிய) வழங்கவில்லை என மதுரை உயர்நீதி மன்றத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக குறிப்பிட்டு வழக்கு எண். WP (MD) No. 2927/2010ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். இம்மாநகராட்சியின் சார்பாக மேற்கண்ட வழக்கை வாதாட திரு. கடற்கரை வழக்கறிஞர் (மதுரை) அவர்களை நியமனம் செய்து வழக்குக்கு வாதாட ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். சி3/7654/2008 | 160) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 12 | தூத்துக்குடி மாநகராட்சியின் ஓய்வூதியர் திருமதி மாடத்தியம்மாள்/கணபதி என்பவர் தனக்கு திருத்திய ஓய்வூதிய நிலுவைத்தொகை வழங்க மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். WP (MD) No. 2844/2010ல் மாநகராட்சி ஆணையர் அவர்களை பிரதிவாதியாக நியமனம் செய்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கை மாநகராட்சி சார்பாக வாதாட திரு. கடற்கரை வழக்கறிஞர் (மதுரை) அவர்களை நியமனம் செய்து வழக்குக்கு வாதாட ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். சி3/30680/2008 | 161) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 13 | தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு காட்டன் ரோடு கதவு எண் 423 முகவரியில் வசித்துவரும் திரு ஜெனோரவேல் என்பவர், சிவன் கோவில் தெரு கதவு எண் 151, 152 ஆகியவற்றின் பொதுபாதை தாவா சம்பந்தமாக முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண் O.S.No.10/2010, I.A.No.21/2010 ஆகும். இவ்வழக்கில் மாநகராட்சி ஆணையாளரை எட்டாவது பிரதிவாதியாக சேர்த்துள்ளார். எனவே மேற்படி வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர் வழக்காட மாமன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைத்தமைக்கும், வழக்கிற்கான செலவினங்களுக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். எப்3/6414/10 | 162) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 14 | தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் சுற்றுலா வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரோச் பூங்கா அருகில், மன்னார் வளைகுடா கடல் பகுதியில் படகுத்துறை அமைக்க அரசு அனுமதி பெற்று பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி சம்பந்தமாக மத்திய அரசிடமிருந்து தடையில்லா சான்று பெற வேண்டியதிருப்பதால் HTL demarcation map தயார் செய்து சுற்றுப்புற சூழல்துறை இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. எனவே இயக்குநர், இன்ஸ்ட்டியூட் ஆப் ரிமோட் சென்ஸிங் அண்ணா பல்கலைக்கழகம் சென்னை நிறுவனத்தாருக்கு மேற்படி நிறுவனத்தாரின் 12.07.10ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி மேற்படி படகுத்துறை இடத்தில் GPS சர்வே HTL demarcation map தயாரித்து அறிக்கையுடன் சமர்ப்பிக்கும் பணியினை செய்து முடிப்பதற்கு ஆலோசனைக் கட்டணம் ரூ.100000/— மற்றும் சேவை வரி ரூ.10300/— ஆகிய கட்டணத் தொகைகள் எல்லாம் சேர்த்து வரும் மொத்த செலவுத் தொகை ரூ.110300/— செலுத்த கோரப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி தொகை ரூ.110300/—ஐ இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம். இ5/14753/2007 | 163) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 15 | திரு ஜோசப் சுகந்தா என்பவர் ஹோட்டல் சுகம் கட்டிடத்திற்கு நிலுவையாக உள்ள சொத்துவரி ரூ.2838083/— செலுத்துமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கு மேற்படி தொகையை வசூல் செய்ய ஆட்சேபனை தெரிவித்து மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S.No.52/2010 மூலம் வழக்கு தொடர்ந்து உள்ளார். எனவே மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பில் மாநகராட்சி வழக்கறிஞரை எதிர்வழக்காடவும், அதற்கான செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதிக்கலாம். அ5/6511/2006 | 164) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 16 | இம்மாநகராட்சி பகுதியில் பாதாளச் சாக்கடை வடிகால் பகுதியில் மழைக்கால நீரை வடியச் செய்வதற்காக மற்றொரு வடிகால் அமைக்கும் பணி செய்வதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை 30.04.2010ம் தேதியன்று தினத்தந்தி நாளிதழிலும், தமிழ்முரசு நாளிதழிலும் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு மெசர்ஸ் தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்தார் விளம்பரக் கட்டணம் ஆக ரூ.3360/— தொகைக்கு 30.04.2010ம் தேதிய TVL 0197195ம் எண் விளம்பர பில்லினையும், மெசர்ஸ் கால் பப்ளிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் மேற்படி விளம்பரக் கட்டணம் ஆக ரூ.2520/—க்கு 30.04.2010ம் தேதிய 499654 TM எண் விளம்பர பில்லினையும் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மெசர்ஸ் தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.3360/—ஐயும் மெசர்ஸ் கால் பப்ளிகேசன்ஸ் நிறுவனத்தாருக்கு விளம்பரக் கட்டணத் தொகை ரூ.2520/—ஐயும் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ம.ப.எண்.202/09—10 | 165) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 17 | இம்மாநகராட்சி பகுதியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், விபத்தினை தடுக்கும் பொருட்டும் கிரேட் காட்டன் ரோடு, (பிரெஞ்ச் சப்பல் ரோடு, பெரைறா தெரு மற்றும் தெற்கு ராஜா தெரு சந்திப்பு) சின்னகோவில் தென்புற வாசல் முன்பு தானியங்கி சைகை விளக்கு புதியதாக அமைக்க தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர்(பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.எண்.சி3/81452/2009, நாள் 20.04.2010இல் சாலை பாதுகாப்பு நிதியின் கீழ் நிறுவிட ஆணையிடப்பட்டு அதன்பேரில் போக்குவரத்து ஒழுங்கு பிரிவு, ஆய்வாளர் அவர்களின் 10.05.2010ஆம் தேதிய கடிதத்தில் அனுமதி வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. | 166) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | எனவே மேற்கண்ட இடத்தில் போக்குவரத்து தானியங்கி சைகை விளக்கு அமைக்கவும், அதற்கு மின் இணைப்பு வழங்குவதற்கும், அதற்காகும் மாதாந்திர தொடர் மின் கட்டணம் இம்மாநகராட்சியால் செலுத்துவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**:<br><br>போக்குவரத்து நெரிசலை சமாளிக்கவும், விபத்தினை தடுக்கும் பொருட்டும் அமைக்கப்படவுள்ள தானியங்கி சைகை விளக்கு அமைப்பதற்கு அனுமதி வழங்கலாம். அதற்கான தொடர் மின் கட்டணம் செலுத்தலாம்.<br>இ3/8227/2010 | |
| | 18 | தூத்துக்குடி மாநகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் 250கேவிஏ டீசல் ஜெனரேட்டர் இன்ஜின் கருவியை விநியோகம் செய்து அமைப்பதற்கு உரிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ''முரசொலி'' நாளிதழிலும், ''தமிழ்ச்சுடர்'' நாளிதழிலும் 23.05.2010ம் தேதியில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு முரசொலி நாளிதழுக்கு செலுத்த வேண்டிய விளம்பரக் கட்டணத் தொகை ரூ.13,182/– என்றும், தமிழ்ச்சுடர் நாளிதழுக்கு செலுத்த வேண்டிய விளம்பரக் கட்டணத் தொகை ரூ.17,004/– என்றும் குறிப்பிட்டு ஆக மொத்த விளம்பர கட்டணத் தொகை ரூ.30,652/–க்கு மேற்படி நாளிதழ்களின் உரிமையாளர் ஆன மெசர்ஸ் ஆர்.ஜே.அசோசியேட்ஸ், சென்னை நிறுவனத்தார் 23.05.2010ம் தேதிய இன்வாய்ஸ் எண் 8733ம் எண் விளம்பர கட்டண பில்லினை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மேற்படி விளம்பரக் கட்டணத் தொகை ரூ.30,652/–ஐ மேற்படி முரசொலி, தினச்சுடர் ஆகிய நாளிதழ்களின் உரிமையாளர் ஆன மெசர்ஸ் ஆர்ஜே அசோசியேட்ஸ் நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ம.ப.எண்.34/08–09/C.E | 167) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 19 | இம்மாநகராட்சி புல்தோட்டம் பகுதியில் பாதாளச்சாக்கடை சுத்தம் செய்யும் பகுதியில் வடிகால் அமைத்தல் சம்பந்தமான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ''தினகரன்'' நாளிதழில் 07.04.2010ம் தேதியில் வெளியிடப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் வெளியிட்டமைக்கு உரிய விளம்பரக் கட்டணத் தொகை ரூ.3390/–க்கு மெசர்ஸ் கால் பப்ளிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தார் 07.04.2010ம் தேதிய 489689ம் எண் விளம்பர பில்லினை இவ்வலுவலகத்துக்கு சமர்ப்பித்துள்ளனர்.<br><br>எனவே மேற்படி விளம்பரக் கட்டணத் தொகை ரூ.3390/–ஐ மெசர்ஸ் கால் பப்ளிகேசன்ஸ் பிரைவேட் லிமிடெட் திருநெல்வேலி நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம். ம.ப.எண்.220/09–10 | 168) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| 30.07.10<br>அவசரக் கூட்டம் | 1 | 1.தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூன்றின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியமானது தூத்துக்குடி மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தினை நிறைவேற்றுவதற்காக ரூ. 2447 இலட்சங்கள் அளவிற்கு கடன் வழங்க ஒப்புதல அளித்துள்ளது. இதன் வட்டி விகிதம் முதல் 18 வருடங்களுக்கு 9.50 சதவீதமும், இரண்டாவது 18 வருடங்களுக்கு 8.50 சதவீதமும் ஆகும். இம்மாமன்றம் தனது தீர்மானம் எண். 373 நாள் 05–10–2005 ஆம் தேதிவாயிலாக இந்த கடனுக்குரிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.<br><br>தற்போது ஜெர்மானிய நிதி நிறுவனத்தின் நிதியுதவி பெற்ற நீடித்த கட்டமைப்பிற்கான நிதியுதவி தமிழ்நாடு என்னும் திட்டத்தின் கீழ் கடன் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டுவதாக குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் முடிவு செய்துள்ளது. மூலதன சந்தையிலிருந்து நிதி திரட்டப்பட்டவுடன் ரூ 83.50 கோடி | 169) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
அளவிற்கு குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலமாக ஒன்பது உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் / மறு கடன் வழங்கவும், அதிலிருந்து தூத்துக்குடி மாநகராட்சிக்கு ரூ 2447 இலட்சம் மறுகடன் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனுடைய வட்டி விகிதம் சுமார் 7.50 சதவீதம் ஏற்கனவே மாநகராட்சி பெற்றுள்ள கடன் விகிதமான 2447/– இலட்சத்திற்கான வட்டி விகிதம் 9.50 & 8.50 சதவீதத்தை விட குறைவாகும். இந்த கடன் பத்திர வெளியீட்டில் தூத்துக்குடி மாநகராட்சி பங்கு பெற்று மறு கடன் பெறுவதன் மூலமாக சுமார் ரூ 4,11,40,000/– அளவிற்கு வட்டித்தொகையை சேமிக்க முடியும்.
மேற்கண்டவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்களுக்கு இந்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
1) குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் வெளியிடப்படவுள்ள கடன் பத்திர வெளியீட்டில் பங்கு கொள்ளுதல்<br>
2) இந்த மாநகராட்சிக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியளவினை முழுமையாக பயன்படுத்தி கொள்ளுதல்<br>
3) இது தொடர்பாக தமிழக அரசு மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் ஆகியவை நிர்ணயித்துள்ள விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல்.
<u>அலுவலகக் குறிப்பு</u>
1) தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டத்திற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் IIIல் பெறப்பட்ட கடன் தொகையினை குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் மூலம் மறுகடன் பெற்று வட்டி தொகை ரூ 41140000/– சேமிப்பு வருகின்ற காரணத்தினால் மாமன்றம் ஒப்புதல் செய்யலாம்.
2) வரிசை எண் 1 முதல் 3 வரையுள்ள தீர்மானங்களை மாமன்றம் அனுமதிக்கலாம்.
இ3/11512/2007
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>2</td>
<td>
தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள அங்கன்வாடி மைய கட்டிடங்கள் பழுதடைந்துள்ளன. எனவே பழுதுபட்டுள்ளஅங்கன்வாடி மையங்களை புதிதாக கட்டுவதற்கு அதற்குரிய செலவினம் கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>சுப்பையா பூங்கா மையம் எண். 5,7 குருஸ்புரம் மையம் எண் 16, 17 சாரங்கபாணி தெரு வரதராஜபுரம் பள்ளி, வடக்கு பத்திரகாளியம்மன் கோவில் தெரு மாநகராட்சி புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல்.</td><td>34.40</td></tr>
<tr><td>2</td><td>சுங்கரநாராயணன் பூங்கா, சிதம்பர நகர் மையம் எண். 40, 41கக்கன் பூங்கா மையம் எண்கள் 46, 47, 48 ஆகிய பகுதியில் புதியஅங்கன்வாடி மையம் கட்டுதல்.</td><td>25.80</td></tr>
<tr><td>3</td><td>கிருஷ்ணராஜபுரம் சக்திவிநாயகர்புரம் 3வது மைல் மற்றும் ஜின்பாக்டரி ரோடு பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுதல்</td><td>17.20</td></tr>
</table>
<u>அலுவலகக் குறிப்பு –</u> மாமன்றம் அனுமதிக்கலாம்.
ம.ப.எண். 76/ 10–11
</td>
<td>170) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 3 | இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணி மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து ஒய்வு பெற்ற கீழ்க்கண்ட பணியாளர்களுக்கான சிறப்பு சேமநல நிதி தொகை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு வழங்க வேண்டியுள்ளது. | 171) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | பணியாளர்களின் பெயர் | ஒய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா | வட்டி | அரசு பங்குத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.என். இராஜபாண்டி (து.ப.மே.) | 31–7–09 | 2960 | 10400 | 10000 | 23360 |
| 2 | திரு.பி.கிருஷ்ணன் (து.ப.மே.) | 7–10–09 | 2960 | 10400 | 10000 | 23360 |
| 3 | திரு.எம். சம்சுதீன் (து.ப.மே.) | 7–10–09 | 2960 | 9988 | 10000 | 22948 |
| 4 | திரு.கணபதி/சண்முகம் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 5 | திருமதி.கிருஷ்ணம்மாள்/ கருப்பன் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 6 | திருமதி.லிங்கம்மாள்/ சுந்தரம் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 7 | திருமதி.பேச்சி/ஒண்டி வீரன்(து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 8 | திரு. வாலகுரு/சங்கரன்(து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 9 | திரு. பெருமாள்/ஆறுமுகம் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 10 | திரு.சித்திரைவேல்/பெருமாள் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 11 | திரு. பி.முத்தையா (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 12 | திரு.சுந்தரம்/சின்ன கருப்பன்(து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 13 | திரு.சின்னமூக்கன்/ கருப்பன்(து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| 14 | திரு.கிருஷ்ணன்/சுப்பன் (து.ப.) | 30–6–10 | 2960 | 11380 | 10000 | 24340 |
| | மொத்தம் | | 41440 | 155968 | 140000 | 337408 |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவுப் பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** அனுமதிக்கலாம்.

எச்2/10845/10

| | | | |
|---|---|---|---|
| | 4 | இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை கல்லுரியில் பணிபுரியும் திருமதி செ. சுடலைகனி (இளநிலை உதவியாளர்) மாற்று திறன் உடையவர் (உடல் ஊனமுற்றவர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டி தொழில்வரித் தொகைக்கு விளக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணபத்துள்ளார்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடியகோவை மாநகராட்சி சட்டவிதி 169H (c) ன் படி மேற்படி திருமதி செ. சுடலைகனி (இளநிலை உதவியாளர்) என்ற பணியாளருக்கு 2010–2011 (2)வது அறையாண்டு முதல் தொழில் வரி செலுத்துவதிலிருந்து விளக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**குறிப்பு** – அனுமதி வழங்கலாம். எ10/2468/2009 | 172) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |
| | 5 | இம்மாநகராட்சி பகுதி காமராஜர் சாலையில் தார்தளம் அமைக்கும் பணி (போல்டன்புரம் மெயின் சாலை சந்திப்பு வரை) பொது நிதியில் செய்ய 16–7–2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 7–7–2010ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>1) திரு. எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு 0.04% குறைவு ரூ.2168986.25 டேவணித்தொகை செலுத்தியுள்ளார். | 173) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | 2) திரு. எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு ரூ. 2199890/– 1.39% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.04% குறைவானதுமான ரூ.2168986.25 திரு. எஸ். சுதர்சன் அவர்கள் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br><br>மேற்படி பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 2200000/–க்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 64/2010–11 | |
| | 6 | இம்மாநகராட்சி பகுதி அம்பேத்கார் நகர் மெயின் சாலை முதல் இராமேஸ்வரம் மெயின் சாலை வரை (60' Road DSF Corner)பொது நிதியில் தார்தளம் அமைக்கும் பணிக்கு 16–7–2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 7–7–2010ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>1) திரு. எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு ரூ.2389199/– 0.02% குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br>2) திரு. எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு ரூ. 2423560/– 1.42% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.02% குறைவானதுமான திரு. எஸ். ரம்போலா அவர்களின் மதிப்புத் தொகை ரூ.2389199/–க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br><br>மேற்படி பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 2420000/–க்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 61/2010–11 | 174) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 7 | இம்மாநகராட்சி பகுதி ஸ்டேட் பேங்க் காலனி சந்திப்பு முதல் அம்பேத்கார் நகர் மெயின் ரோடு வரை (60' ரோடு) பொது நிதியில் தார்தளம் அமைக்கும் பணிக்கு 16–7–2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 7–7–2010ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>1) திரு. எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு ரூ. 2472464.75/– 0.02% குறைவு டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>2) திரு. எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு ரூ. 2502170/– 1.18% அதிகம் டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீட்டு விகிதத்திற்கு 0.02% குறைவானதுமான திரு. எஸ். சுதர்சன் அவர்களின் மதிப்புத் தொகை ரூ 2472464.25/ க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம். | 175) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்படி பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 2495000/—க்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 60/2010—11 | |
| | 8 | இம்மாநகராட்சி பகுதி போல்டன்புரம் மெயின் சாலையில் தார்தளம் அமைக்கும் பணிக்கு பொது நிதியில் செய்ய 16—7—2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 7—7—2010ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>1) திரு. எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு 0.04% குறைவு ரூ.2423020.25/— டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br>2) திரு. எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு 1.85% அதிகம் ரூ. 2468675/— டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீட்டு விகிதத்திற்கு 0.04% குறைவானதுமான திரு. எஸ். ரம்போலா அவர்களின் மதிப்புத் தொகை ரூ 242320.25/ க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br>மேற்படி பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 2450000/—க்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 62/2010—11 | 176) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 9 | இம்மாநகராட்சி பகுதி எட்டையாபுரம் மெயின் சாலை முதல் ஸ்டேட் பாங்க் காலனி சந்திப்பு (60' ரோடு) வரை தார்தளம் அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 16—7—2010 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் இப்பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி 07.07.10ல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>1) திரு. எஸ். சுதர்சன் ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு 0.07% குறைவு ரூ. 1609361/— டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br><br>2) திரு. எஸ். ரம்போலா ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டிற்கு 2.20% அதிகம் ரூ. 1646045/— டேவணித்தொகை செலுத்தியுள்ளார்.<br>**அலுவலகக் குறிப்பு**<br>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீட்டு விகிதத்திற்கு 0.07% குறைவானதுமான திரு. எஸ். சுதர்சன் அவர்களின் மதிப்புத் தொகை ரூ 1609361/ —க்கு மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.<br>மேற்படி பணிக்கு அவசர அவசியத்தை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 1630000/—க்கு மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வேலை உத்தரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண். 63/2010—11 | 177) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 10 | இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு ஆய்வராக பணிபுரிந்து தனது வயது முதிர்வின் காரணமாக 30–6–2010 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள திரு. எஸ். செல்வஜெயபாண்டி என்பவரது சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகையினை கீழ்க்கண்ட விவரப்படி வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>சேமநல நிதி சந்தா தொகை ரூ 2960/–<br>வட்டித் தொகை ரூ. 11291/–<br>அரசு மானியம் ரூ. 10000/–<br>————————————<br>மொத்தம் ரூ. 24251/–<br>————————————<br><br>**அலுவலகக் குறிப்பு**: அனுமதிக்கலாம்<br>எச்1 /607/2010 | 178) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | 11 | இம்மாநகராட்சி கணினி பிரிவிலுள்ள கீழ்க்கண்ட விவரப்படி உள்ள கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் UPS & பேட்டரிகள் உபயோகமற்ற நிலையில் உள்ளதாகவும், மிகவும் மெதுவாகவும் இயங்கும் நிலையில் உள்ளதாகவும் இருக்கின்றது.<br><br>**சாமான்கள் விவரம்** — **எண்ணிக்கை**<br>1) கணினிகள் – 17<br>2) பிரிண்டர்கள் – 8<br>3) லேசர் ஜெட் பிரிண்டர்கள் – 11<br>4) UPS – 6<br>5) பேட்டரி (un used) – 19<br><br>மேற்படி சாமான்களில் 5 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள 17 எண்ணம் கணினிகளுக்கு உயர்நிலை மாற்றம் செய்வதற்கும் வரிசை எண் 2, 3, 4, 5ல் உள்ள பிரிண்டர்கள், லேசர் ஜெட் பிரிண்டர்கள், UPS, பேட்டரி (un used) சாமான்களை D.G.S.T ரேட் விலை விகிதத்தில் வாங்குவதற்கும், மேற்படி வகைக்கு ஆகும் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br>இ5/12735/10 | 179) அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழங்கப்பட்டது |

மாமன்றம், தூத்துக்குடி.
நாள்: 23–07–2010

மேயர்,
மாமன்றம், தூத்துக்குடி.